Registered as a News paper பக்கங்கள் 4 விலை ரூபா 5-00

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் [illegible] Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 25 (10-11-93) புதன்கிழமை ஓசை 265

## ஆசிரியர் கவனக் குறைவால் 25 வீத மாணவர் பாதிப்பு

''இலங்கையில் 25 சத வீதமான மாணவர்கள் தமது ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் கவனமும் கிடைக்காமையினால் தமது கல்வியை இடையில் கைவிடவேண்டி ஏற்படுகிறது. இவ்விடயம் அண்மைக்கால புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.'' என கல்விச் சேவைகள் அமைச்சர் தெரிவித்துள்ளார். கல்விச் சேவைகள் அமைச்சில் நடைபெற்ற ஆசிரியர் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது இத்தகவலை வெளியிட்ட அமைச்சர், ''இது கவலைதரும் விடயமாகும். இதிலிருந்து ஆசிரியர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என புரிந்து கொள்ள முடிகிறது'' என்றார். மேலும், நாளாந்தம் 20 வீதத்திற்கும், 30 வீதத்திற்கும் இடைப்பட்ட தொகை ஆசிரியர்கள் விடுமுறையில் நிற்கின்றனர். இதுவும் கல்வியை கணிசமான அளவு பாதிக்கிறது. ஆசிரியர்களின் குறைபாடுகளை தீர்ப்பதற்கு கணிசமான முயற்சிகள் (3ஆம் பக்கம் பார்க்க)

# போரினால் பெரும் நிதி நெருக்கடி!

# சம்பள உயர்விற்குப் பணமில்லை!

## வரவு-செலவு திட்டத்தில் 6998 கோடி ரூபா துண்டு

### பாதுகாப்பிற்கு 2045 கோடி ஒதுக்கீடு

டி. பி. விஜேதுங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றதைத் தொடர்ந்து முதலாவது வரவு செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 6998 கோடி ரூபா துண்டு விழுகிறது.

நிதிஅமைச்சுக்கு அகக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 7141 கோடி ரூபா இவ்வமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்து பாதுகாப்பு செலவினங்களுக்கு 2045 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விக்கு 924கோடி ரூபாவும், சுகாதாரத்திற்கு 542கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்து

## சிரேஷ்ட அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் போரினால் சிறிலங்கா அரசின் திறைசேரி பெரும் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இதன் காரணமாக இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு எதுவும் கிடைப்பதற்கான வாய்ப்பு எதுவும் இல்லையென சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.**

இது குறித்து மேலும் அப்பத்திரிகை தெரிவிக்கையில்: எந்த அரசாங்க ஊழியர்களுக்கும் சமீப காலத்தில் சம்பள உயர்வு வழங்குவது சாத்தியமில்லை. காரணம் வடக்கு கிழக்கில் நடைபெறும் போருக்கு பெருமளவிலான பணம் செலவிடப்படுகிறது. இதன் காரணமாக சம்பள உயர்வு வழங்க திறைசேரியில் நிதி இல்லை எனவும் அவ் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதே சமயம், டீசல் விலை கூடும் சாத்தியம் உள்ளதாகவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## வரவு-செலவுத்திட்ட உரை; எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத்திட்ட ஆரம்ப உரையை சகல எதிர்க்கட்சிகளும் பகிஷ்கரிப்பது என நேற்று இடம்பெற்ற எதிர்க்கட்சிகள் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவையில் இல்லாத ஒரு ராஜாங்க அமைச்சர் இவ்வாறு ஒரு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்க முடியாது என தெரிவித்த அவை ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்கவின் இந்நடவடிக்கையைக் கண்டித்து பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளன.

பொறுப்புவாய்ந்த அமைச்சு ஒன்றிற்கு ஒரு அமைச்சரை ஜனாதிபதி இதுவரை நியமனம் செய்யாது விட்டமையை அவை கண்டித்தன. [3ஆம் பக்கம் பார்க்க]

## கிழக்கில் தேர்தல் மீளப்பரிசீலனை!

கிழக்கு மாகாணத்தில் ஜனவரியில் உள்ளூராட்சி தேர்தல் நடாத்துவது பற்றி அரசாங்க உயர்மட்டம் மறுபரிசிலனை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களான மஃறூப், ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோரும் ஆட்சேபம் தெரிவிப்பதனாலேயே இது பற்றி மறுபரி[illegible] தெரிவிக்கப்படுகிறது.

இத் தேர்தல் நடாத்துவது பற்றி பாதுகாப்பு படை வட்டாரங்களும் பெரிதாக திருப்தி தெரிவிக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

இதே சமயம் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு உத்தரவாதமுள்ள இடங்களில் உள்ளூராட்சி தேர்தலை விரைவாக நடாத்தும்படி பாராளுமன்ற தெரிவுக்குழு சிபார்சு செய்ய இருப்பதாக தெரிய[illegible]

## நிவாரண கொடுப்பனவுகள் நிறுத்தப் பணிப்பு

(நமது நிருபர்)

கடும்பாதிப்பிற்குள்ளானோருக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து நேற்று மாலை யாழ். அரச அதிபருக்கு கிடைத்த தகவலொன்று தெரிவிக்கின்றது.

இதன்படி சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் யாழ். மாவட்டம் உட்பட எட்டு மாவட்டங்களிற்கு இத் நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

## கடும் காற்று, மழை 4000 வீடுகள் மூழ்கின

(கொழும்பு)

இலங்கையின் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினமிரவு வீசிய கடும் காற்றும், மழையும் காரணமாக கரையோரப் பகுதியில் நாலாயிரம் குடும்பங்கள் வீடு இழந்தன. கட[illegible]

### 22 அடி உயரத்திற்கு அலை

[illegible]கினர் கடல் அலை 22 அடி உயரத்திற்கு எழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வென்னப்புவ, நாத்தாண்டிய, நீர்கொழும்பு, தெஹிவளை ஆகிய பகுதிகளில் பல

## இனப்பிரச்சினையை தீர்க்க தவறின் ஐ. நா. தலையிடும்

### பூட்ரஸ் காலி எச்சரிக்கை

உலக நாடுகள் பலவற்றில் நிலவும் இனப்பிரச்சினையை அந்நாடுகள் தீர்க்க தவறினால் அதில் ஐ. நா தலையிடும் என ஐ. நா சபையின் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ்காலி எச்சரித்துள்ளார். வாஷிங்டன் தேசிய பாதுகாப்பு கல்லலைக் கழகத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலக நாடுகளில் தற்போது உள்நாட்டுப் போர் நடக்கக் காரணம் அந்நாடுகளில் உள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்படாமையே இதனால் சர்வதேச அமைதி குலைகிறது.

எனவே எந்தவோர் நாடும் இனப்பிரச்சினையை அசட்டை செய்ய முடியாது. பல இனங்கள் வாழும் நாடுகளின் தலைவர்கள் தம் நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினையை தீர்க்க தவறியுள்ளனர் இதனால் அந்நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் நடக்கின்றன

இனியும் இந்நாடுகள் இனப்பிரச்சினையை தீர்க்க தவறின் அந்நாடுகளில் இனப்பிரச்சினையை தீர்க்க ஐ. நா. சபை தலையிட நேரிடும் எனவும் ஐ நா செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி கூறினார்.

நியமில்லை. காரணம் வடக்கு வழங்க இறைசேரியில் நிதி

# கிழக்கில் தேர்தல் மீளப்பரிசீலனை!

கிழக்கு மாகாணத்தில் ஜனவரியில் உள்ளூராட்சி தேர்தல் நடாத்துவது பற்றி அரசாங்க உயர்மட்டம் மறுபரிசீலனை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களான மஃறூப், ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோரும் ஆட்சேபம் தெரிவிப்பதனாலேயே இது பற்றி மறுபரிசீலனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் தேர்தல் நடாத்துவது பற்றி பாதுகாப்பு படை வட்டாரங்களும் பெரிதாக திருப்தி தெரிவிக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

இதே சமயம் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு உத்தரவாதமுள்ள இடங்களில் உள்ளூராட்சி தேர்தலை விரைவாக நடாத்தும்படி பாராளுமன்ற தெரிவுக்குழு சிபார்சு செய்ய இருப்பதாக தெரிய வருகிறது.

## நிறுத்தப் பணிப்பு

(நமது நிருபர்)

கடும்பாதிப்பிற்குள்ளானோரிற்கான நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து நேற்று மாலை யாழ். அரச அதிபரிற்கு கிடைத்த தகவலொன்று தெரிவிக்கின்றது.

இதன்படி சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் யாழ். மாவட்டம் உட்பட எட்டு மாவட்டங்களிற்கு இந் நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

## கடும் காற்று, மழை 4000 வீடுகள் மூழ்கின

(கொழும்பு)

இலங்கையின் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினமிரவு வீசிய கடும் காற்றும், மழையும் காரணமாக கரையோரப் பகுதியில் நாலாயிரம் குடும்பங்கள் வீடு இழந்தன. கடலுக்குச்சென்ற மூவர் பலியா

**22 அடி உயரத்திற்கு அலை**

கினர் கடல் அலை 22 அடி உயரத்திற்கு எழுந்ததாக தெரிவி கப்படுகிறது.

வென்னப்புவ, நாத்தாண்டிய, நீர்கொழும்பு, தெஹிவளை ஆகிய பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது மேற்கு கடலில் ஏற்பட்ட தாழமுக்கமே கடும் காற்றுக்கும் மழைக்கும் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இனப்பிரச்சினையை தீர்க்க தவறின் ஐ. நா. தலையிடும்

## பூட்ரஸ் காலி எச்சரிக்கை

உலக நாடுகள் பலவற்றில் நிலவும் இனப்பிரச்சினையை அந்நாடுகள் தீர்க்க தவறினால் அதில் ஐ. நா தலையிடும் என ஐ. நா சபையின் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ்காலி எச்சரித்துள்ளார் வாஷிங்டன் தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலக நாடுகளில் தற்போது உள்நாட்டுப் போர் நடக்கக் காரணம் அந்நாடுகளில் உள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்படாமையே இதனால் சர்வதேச அமைதி குலைகிறது. எனவே எந்தவோர் நாடும் இனப்பிரச்சினையை அசட்டை செய்ய முடியாது. பல இனங்கள் வாழும் நாடுகளின் தலைவர்கள் தம் நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினையை தீர்க்க தவறியுள்ளனர் இதனால் அந்நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் நடக்கின்றன

இனியும் இந்நாடுகள் இனப்பிரச்சினையை தீர்க்க தவறின் அந்நாடுகளில் இனப்பிரச்சினையை தீர்க்க ஐ. நா. சபை தலையிட நேரிடும் எனவும் ஐ நா செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி கூறினார்.

# கற்பிட்டியில் 6 படகுகள் 10 இயந்திரங்கள் கடத்தல்!

(கொழும்பு)

கற்பிட்டி கடற்பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்க்குரிய ஆறு கண்ணாடி இழைப் படகுகளும் அதற்குரிய இயந்திரங்கள் பத்தும் இனந்தெரியாதவர்களால் கடத்திக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இயந்திரங்கள் ஒவ்வொன்றும் 25 குதிரைவலுவுடையது. இது பற்றி கற்பிட்டி பொலிஸ் விசாரணை மேற்கொண்டுள்ளது. இயந்திரங்கள் காணாமல் போனதை யிட்டு பொலிசார் குழம்பிப் போயுள்ளனர்.

இந்தப் பகுதியிலேயே பெற்றோல், டீசல் கடத்தப்படுவதாகவும் இதனாலே இப் பகுதியில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வாக்கு தேடிக்கொடுப்பது இ. தொ. கா. வேலையல்ல!

(கொழும்பு)

## தொண்டமான்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மக்களுக்கு சேவை செய்வதைத்தான் குறிக்கோளாக கொண்டிருக்கிறதே ஒழிய, எவருக்கும் வாக்குகளை வாங்கிக் கொடுக்கும் நோக்கத்திலல்ல.

இவ்வாறு இ. தொ. காவின் தலைவரும் கிராமிய கைத் தொழில் அமைச்சருமான எஸ் தொண்டமான் கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வருமாயின் அப்போதைய நிலையை கவனத்தில் எடுத்தே இ. தொ. கா செயற்படும். யார் எமது மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்ய உதவி புரிவார்களோ அவர்களுக்கு ஆதரவளிக்கவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்யும் என்றும் அவர் அந்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியின்போது எஸ். தொண்டமான் மேலும் தெரிவிக்கையில்;

நுவரேலியா அம்பகமுவ பிரதேசசபை தேர்தலில் இ. தொ. கா. தனித்து போட்டியிட்டது. இதிலிருந்து நாம் நமது மக்களின் நன்மை கருதியே செயற்படுவோமேயன்றி எவருக்கும் வாக்குகளை வாங்கிக்கொடுக்க அல்ல என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

அநுரா பண்டாரநாயக்கா அரசாங்கத்திற்குள் பிரவேசித்துள்ளார் இந்தப் பிரவேசம் அரசாங்கத்திற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையிலான உறவில் எவ்வாறான பிரதிபலிப்பை கொண்டு வரும் என நீங்கள் நினைக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு,

(3ஆம் பக்கம் பார்க்க)

## நாளை படகுச்சேவை

இளாலி-பூநகரி படகுச் சேவை நாளை வியாழக் கிழமை வழமையானநேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## சந்திப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள ஒலிப்பதிவுநாடா, ஒளிப்பதிவு நாடா விநியோகத்தர்கள், பதிவு செய்பவர்கள் ஆகியோருடனான சந்திப்பொன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

2-ம் லெப். ராஜேந்திரகுமார் (ஆதவன்)

மட்டக்களப்பு களுவுந்தன் வெளியில் கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் விடுதலைப்புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ம்லெப் ராஜேந்திரகுமார்/ஆதவன் (சண்முகம் தயாலிங்கம் மகிழடித்தீவு கொக்கட்டிச் சோலை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# புலிகளைச் சந்திக்க யாழ் செல்ல உள்ளேன்

(கொழும்பு)

## சபாநாயகர்

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்திக்க தான் விரைவில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக சபாநாயகர் முகமட் தெரிவித்துள்ளார் இத் தகவலை கொழும்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஏஜென்சிச் செய்தி நிறுவனமொன்றிற்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகரின் செய்தி வெளியிடும் அதிகாரி ''இத் தகவல் உண்மை'' என தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அண்மையில் அவுஸ்ரேலியா சென்றபோது அங்கு விடுதலைப்புலிகள் அங்கத்தவர் ஒருவரைச் சந்தித்து சமாதான தீர்வு ஒன்றுக்கு மத்தியஸ்தம் வகிக்க தயாராக இருப்பதாக கூறியுள்ளார் என்ற தகவலையும் அவ் அதிகாரி வெளியிட்டார்.

[3ஆம் பக்கம் பார்க்க]

**கிழக்கு பல்கலை. அகதிமுகாமிலிருந்து**

## காணாமல்போன 250 பேர் இறந்துவிட்டதாக முடிவு

[மட்டக்களப்பு]

வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தில் அகதிகளாக தங்கியிருந்தபோது படையினரால் கைது செய்யப்பட்ட 250க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என தற்போது கருதப்படுகிறது. 1990 ஆம் ஆண்டில் இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தற்போது காணாமற்போனஇவர்களுக்கு அரசு இப்போது மரணச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் பற்றிய எந்த விபரமும் படையினராலோ அரசினாலோ இதுவரைதெரிவிக்கப்படவில்லை. பல இராணுவ முகாம்களிலும் இவர்களின் உறவினர்கள் மாறி மாறி இவர்கள் பற்றி விசாரித்தபோது தாம்அவர்களை கைது செய்யவில்லை என படையினர்கூறிவந்தனராம். அரசுக்கு பல முறையீடுகள் கொடுக்கப்பட்டும் பலன் ஏற்படவில்லை. தற்போது இவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்க அரசு முன்வந்திருப்பது அனைவரும் இறந்து விட்டதையே உறுதிப்படுத்துவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

# வடக்கில் தாக்குதல் நடத்த காலநிலை சீராக இல்லை!

## இராணுவத் தளபதிக்கு ஆலோசனை

(கொழும்பு)

ஜனவரி மாதம்வரை வடக்கில் எவ்வித தாக்குதல்களையும் நடத்தமுடியாது என்று இராணுவத் தளபதிக்கு உயர் மட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வீதிகள் சேறும், சகதியுமாக காணப்படுகின்றன என்றும் இது புதிய தாக்குதல் நடவடிக்கைக்கு இடையூறாக இருக்கும் என்றும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த ஆலோசனை லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவை ஆழமாக சிந்திக்க வைத்திருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையினால் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள அவப்பெயரை நீக்க மீண்டும் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை வடக்கு மீது மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ள வேளை அதற்கு இயற்கையே எதிராக இருப்பதையிட்டு உள்ளூர புகைந்துகொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என இராணுவ ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## இந்தியாவிற்கு சவாலாக மாறிவிட்ட புலிகள்

(டில்லி)

## நரசிம்மராவ்

ஒருபுறம் தமிழீழ விடுதலைப்புலிகளாலும், மறுபுறத்தில் வடகிழக்கு மாநிலங்களில் சீர்குலைவு சக்திகளாலும் இந்தியா பெரும் சவாலை எதிர்நோக்குவதாக இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தேர்தல் பேரணி ஒன்றில் கலந்து

[3ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### தவறிவிட்டது

5. 11. 93 அன்று கிளாலிக் கரையில் இருமூக்குக்கண்ணாடிகளும் சிறு பேர்சுடன் அடையாள அட்டையும் (லோ. பாலாம்பிகை) தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர் ஐ. லோகேஸ்வரன் 58.2 25 செபஸ்தியார் ஒழுங்கை ஓட்டுமடம் என்னும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6535)

### நவீன சிகிச்சை

உங்களின் இருதயம் சீராக இயங்குகின்றதா? இரத்த அழுத்தத்துடன்நாடித்துடிப்பு எவ்வளவு? யாவும் Electronic Aunicular Pulsations Therapy யினாலும் Digital Electronic Meter மூலமும் நவீன வைத்திய உபகரணங்களினாலும் சகல நோய்கட்கும் சிகிச்சை யளிக்கப்படும். இரெட்ணம் வைத்தியசாலை 129, ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம். (6518)

**University of Jaffna Publication**

Shrimp Culture
by Dr. K. Chitravadivelu
is now available for sale
Price: Rs. 140/-
Please contact the Assistant Registrar, Administration for your requirements.

REGISTRAR
University of Jaffna
08. 11. 1993.

[சி/7882]

### இன்று மீண்டும் சனி மாற்றம்

இன்று முதல் 31.5.95வரை கும்பராசியிலே சஞ்சரிக்கும் சனி, ஒரு வருடம் வரை வியாழனின் சுபபார்வையைப் பெறுகிறது. சனி மாற்றம் ரூ.10/- பூபாலசிங்கம், மக்மிலன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (6525)

### [illegible] மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6490)

### கடையில் திருட்டு

நெல்லியடி சந்தைப் பகுதிக்குள் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று இரவு இனம் தெரியாதவர்களால் கொள்ளை சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

உதயம் வர்த்தக நிலையத்தை முற்றுகையிட்ட கொள்ளையர்கள் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கி அங்கிருந்து இருபது பண்டல் சிகரட், கற்பூரம், சம்பு மற்றும் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இது சம்பந்தமாக பருத்தித்துறை காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (யோ)

### சங்காபிஷேகம்

வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விசேட சங்காபிஷேகம் காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் நித்தியானந்த சர்மா அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது

### சைவசமய பாடப் பரீட்சை

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து மன்றம் கிராம மாணவரிடையே நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சை எதிர் வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும் என மன்றப் பரீட்சைப் பொறுப்பாளரும், செயலாளருமான திரு. க. சிவசங்கரநாதன் தெரிவித்துள்ளார். (24)

## கோரிக்கை

கூட்டுறவுப் பரிசோதகர்களை தெரிவு செய்வதற்கான விசேட பரீட்சை ஒன்றை நடாத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி போட்டிப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறாததை அடுத்து விசேட பரீட்சை ஒன்றை ஏற்பாடு செய்து தரும்படி கோரி பரீட்சை ஆணையாளருக்கு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் வானொலிச் செய்தி ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

உ
சிவமயம்

## இலிங்கதாரண அழைப்பு

அன்புடையீர்!

அருள்மிகு சித்திவிநாயகர் திருவருள் துணை கொண்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசித் திங்கள் 25-ம நாள் (10-11-93) புதன்கிழமை இன்று காலை 8-46 மணி முதல் 10-42 மணி வரையுமுள்ள கன்னி லக்கின சுபவேளையில்

சிவஸ்ரீ க. இராமலிங்க ஐயர்
சிவஸ்ரீ க. வைகுந்ததாஸ் ஐயர்

ஆகியோருக்கு குளக்கட்டு அருள்மிகு சித்திவிநாயர் சன்னிதியில் இலிங்கதாரணம் (உபநயனம்) செய்யத் திருவருள் கூடியிருப்பதால் அவ்வமயம் அனைவரையும் வருகை தந்து சிறப்பித்தேகும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்!

குறிப்பு:- பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு பின்னர் அவரது இல்லத்திற்கு மக்கள் சகிதமாக அழைத்து வரப்படும்.

தீக்ஷா. குரு இலக்கிய இலக்கண சிவசிரோமணி சிவகாமபானு.
சிவஸ்ரீ வை. முத்துக்குமாரக்குருக்கள், காங்கேசன்துறை.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
கொடிகாமம். சிவஸ்ரீ க. இராமலிங்க ஐயர்
வரணி. குடும்பத்தினர்.

(6474)

## சூட்டில் காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(குருநகர்)

கடந்த ஞாயிறு இரவு மண்டைதீவு கழுவந்தீவுப் பகுதியில் சிறிலங்கா ராணுவம் சுட்டதில் காயமடைந்தவர் ராணுவத்தினரால் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தி தெரிவிக்கிறது.

இதேவேளைமேற்படி மீனவரான குருநகரைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான ரவீந்திரனை மீட்டு தம்மிடம் ஒப்படைக்கும்படி உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியைக் கேட்டுள்ளனர். (21)

## யா/இணுவில் இந்துக்கல்லூரி பெயர்சூட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும்

**காலம்: 1993-11-10**
**புதன்கிழமை காலை 9.00 மணி**

தலைவர்: திரு. சு. நர்பித்துரை (அதிபர்)

பிரதமவிருந்தினர்
உயர்திரு இரா சுந்தரலிங்கம்
(பிரதேசக் கல்விப் பணிப்பாளர்)

**ஆசியுரை வழங்குவோர்கள்:**
பிரம்மஸ்ரீ வை சோமாஸ்கந்தக் குருக்கள்
இ. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்
அருள் கலைவாரிதி பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர்
நல்லை ஆதீன குருமகாசந்நிதானம்
திரு. வை. கதிர்காமநாதன் (முன்னைநாள் அதிபர்)
திரு. அரங்கன் சுவாமிகள் சன்மார்க்கசபை, இணுவில்.
திரு. சோதிலிங்க சுவாமிகள் சன்மார்க்கசபை, இணுவில்.

**சிறப்பு விருந்தினர்கள்:**
திரு சு. இரத்தினராசா
(பிரதிக்கல்விப்பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்)
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா. ஜெயராசா (முதுநிலை விரிவுரையாளர், தலைவர், இராமநாதன் நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக் கழகம்
திரு. க. தேவராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
திரு. கண்ணன்
(அரசியல்துறை, த.ஈ.வி.புலிகள், வட்டச்செயலகம்உடுவில்)
திரு. மு. விஜயரகுநாதன்
(கணக்காளர், பிரதேச செயலகம், கோப்பாய்)
திரு க. சபாநாதன்
(கணக்காளர், யாழ். போதனா வைத்தியசாலை)
திரு. ப. விக்னேஸ்வரன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்)
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
(கொத்தணி அதிபர், இராமநாதன் கல்லூரி)

**சிறப்புரை:**
பண்டிதர் ந. இராசையா (செயலாளர், பா. அ. ச)

**நன்றியுரை:**
சா. முத்துக்குமார சுவாமி
(பழைய மாணவர் சங்கம்)

## வாழ்த்துரை

1864ஆம் ஆண்டு நாவலர் நன்னெறி எனும் விதையில் தோற்றமாகி வித்தியாசாலை எனத் தவழ்ந்து, மகாவித்தியாலயம் என மகோன்னதம் பெற்று 10-11-1993 புதன்கிழமை இன்று யாழ்/இணுவில் இந்துக்கல்லூரியென ஏற்றம் காணும் எம்மிணுவைக் கல்வியாலயம் மேலும் வளர்ச்சி பெற இணுவை பரராஜசேகரப் பிள்ளையை வழுத்தி ஆனைமுகன் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அண்ணா தொழிலகம்
இணுவில்

(சி-7877).

## அல்டி - ALDI

**தீபாவளி மலிவு விற்பனை**
நவம்பர் 1-ம் திகதி முதல் நவம்பர் 12-ம் திகதி வரை
★ சகல விதமான கைக்கடிகாரங்கள்,
★ சுவர்மணிக் கூடுகள்
முதலியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நம்பிக்கையானது! உத்தரவாதமுடையது!
★ அல்டி ★ 269/1மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/7861)

யாழ் நகரில்

**புதிய [illegible] கலையகம்!**
**உதயம் நிழற்படக் கலையகம்.**
(ஸ்ருடியோ)

தமிழீழ

1864ஆம் ஆண்டு நாவலர் நன்னெறி எனும் விதையில் தோற்றமாகி வித்தியாசாலை எனத் தவழ்ந்து, மகாவித்தியாலயம் என மகோன்னதம் பெற்று 10-11-1993 புதன் கிழமை இன்று யாழ்/இணுவில் இந்துக்கல்லூரியென ஏற்றம் காணும் எம்மிணுவைக் கல்வியாலயம் மேலும் வளர்ச்சி பெற இணுவை பராராஜசேகரப்பிள்ளையை வழுத்தி ஆனைமுகன் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அண்ணா தொழிலகம்
இணுவில்

(சி-7877).

---

யாழ்நகரில்

## புதிய புகைப்பட கலையகம்!
## உதயம் நிழற்படக் கலையகம்.
(ஸ்ருடியோ)

கறுப்பு வெள்ளைப் படங்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள.

"உதயம் நிழற்பட கலையகம" (ஸ்ருடியோ) பாஸ் போட், தபால் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, போஸ்காட்

அளவுகளிலான படங்கள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

வர்ணப்படங்கள் அனுபவம் வாய்ந்த படப்பிடிப்பாளரினால் எடுத்துக் கொள்ள.

"உதயம் நிழற்படக் கலையகம்" (ஸ்ருடியோ) மாவீரர், பெருமக்களின் கலர் / கறுப்பு,வெள்ளை படங்கள் பெரிதாக்கித் கொடுக்கப்படும்.

நாடுங்கள்

**உதயம்**
**நிழற்படக் கலையகம் (ஸ்ருடியோ)**
68, அருச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

(6531)

---

மீண்டும் யாழ்நகரில்
றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்
## தேன் சிந்தும் ஐஸ்கிறீம்
வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் புறூட் சலட் ஐஸ்கிறீம்
சொக்லட் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம்
மற்றும் சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி
அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்

★ உங்களை அழைக்கின்றார்கள் ★

"ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்"

## ஹொட்டல் றொலெக்ஸ்
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7867)

---

## தீபாவளி மலிவு விற்பனை
நவம்பர் 1-ம் திகதி முதல் நவம்பர் 12-ம் திகதி வரை

★ சகல விதமான கைக்கடிகாரங்கள்,

★ சுவர்மணிக் கூடுகள்

முதலியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நம்பிக்கையானது! உத்தரவாதமுடையது!

★ **அட்டி** ★ **269/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/7861)

---

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## கணனி கல்வி நிலையங்களுடன் இணைந்து நடாத்தும்
## "கணனி இலத்திரனியல் கண்காட்சி"

❋ கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம்
❋ கணனியின் பிரயோகங்கள்
❋ கணனியின் விந்தைகள்
❋ சிறுவர்களுக்கான கணனி விளையாட்டுகள்
❋ இலத்திரனியல் கணனி தொழில் நுட்பம்

**பங்குபற்றும் நிறுவனங்கள்**

❋ யாழ். பல்கலைக்கழகம்
❋ தொழில் நுட்பக் கல்லூரி – வட்டுக்கோட்டை
❋ கணனி விஞ்ஞான கல்வி நிலையம் [C. S. A.]
❋ வணிக முகாமைத்துவ கல்லூரி
❋ யுனிக்கோ கல்வி நிறுவனம்
❋ வட இலங்கை தொழில் நுட்ப நிறுவனம்
❋ பற்றீசியன் இன்ஸ்ரிரியூற்

**இடம்: யாழ். பல்கலைக்கழகம்**

**காலம்: 1993 நவம்பர் 10ம், 11ம், 12ம் திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை**

**பிரவேசம்: ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-**

* தென்மராட்சி மாணவர்கள் 12.11.93 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்தும், வடமராட்சி மாணவர்கள் நண்பகல் 12.00 மணியிலிருந்தும் கண்காட்சியினை பார்வையிட வருமாறு வேண்டப்படுகின்றனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/7881)

---

கலாநிதி சபா. ஜெயராசா (முதுநிலை விரிவுரையாளர், தலைவர், இராமநாதன் நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக் கழகம்

திரு. க. தேவராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

திரு. கண்ணன்
(அரசியல்துறை, த.ஈ.வி.புலிகள், வட்டச்செயலகம் உடுவில்)

திரு. மு. விஜயரகுநாதன்
(கணக்காளர், பிரதேச செயலகம், கோப்பாய்)

திரு க. சபாநாதன்
(கணக்காளர், யாழ். போதனா வைத்தியசாலை)

திரு. ப. விக்னேஸ்வரன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்)

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
(கொத்தணி அதிபர், இராமநாதன் கல்லூரி)

**சிறப்புரை:**
பண்டிதர் ந. இராசையா (செயலாளர், பா. அ. ச)

**நன்றியுரை:**
சா. முத்துக்குமார சுவாமி
(பழைய மாணவர் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
கே.கே.எஸ், மகாவித்தியாலயம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள்**
இணுவில் இந்துக்கல்லூரி

(6526)

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-11-10

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - நொச்சி முனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கரன்** [ஆறுமுகம் கணேசராசா - கல்லடி - மட்டு]

1987ஆம் ஆண்டு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் எமது முகாம் மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுரேஸ்/சுரேன்** [வினாசித்தம்பி சந்திரமோகன் - 1-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு]

அச்சுவேலி, கோப்பாய், அராலிப் பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கணவன், மனைவி உட்பட 04 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**சுப்பிரமணியம் தியாகராசா** [புங்குடுதீவு]

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மட்டு - வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு களுவங்கேணியில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு' களுவங்கேணிக்கும், வந்தாறுமூலைக்குமிடையே உள்ள காட்டுப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு பிணமாக மீட்கப்பட்ட வயோதிபர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/7880)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

மானத்திற்காக அனைத்தையும் பணயம் வைக்கும் வீர, தியாக உணர்வு கொண்ட ஆன்மாக்கள் ஒருசிலர்தான் சுதந்திரத்தை எப்பொழுதுமே போராடிப் பெறுவர்.

மகாத்மா காந்தி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## மலையகத் தமிழர் பெற்றுவிட்டதென்ன?

மலையகத் தமிழ் மக்கள் மீதும், அமைச்சர் தொண்டமான் மீதும், சிங்களப் பேரினவாதிகள் மீண்டும் ஒரு தடவை பாயத் தொடங்கியுள்ளனர். அமைச்சர் தொண்டமான் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் இதற்குக் காரணம் என வெளிக்காட்டப்படுகின்ற போதிலும், அடிப்படையில் பௌத்த பேரினவாதம் மலையகத் தமிழ் மக்கள் மீதும், அமைச்சர் தொண்டமான் மீதும் கொண்டுள்ள வெறுப்பே இதற்குக் காரணமாகும்.

அதாவது, அமைச்சர் தொண்டமான் சில வேளைகளில், பேச்சளவில் தானும் தமிழர்களின் உரிமைகள் பற்றிப் பேசுவதை சிங்களப் பேரினவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. அவர், சிங்கள அரசாங்கத்தை 'பிளாக்மெயில்' செய்வதாகவும், அமைச்சரவை கட்டுப்பாட்டை மீறிச் செயற்படுவதாகவும் அவை குற்றம் சாட்டுகின்றன. அதாவது, தமது இனத்தைப் பற்றி அமைச்சர் தொண்டமான் பேசுவது அவர்களுக்கு ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

இந்த வகையில் அமைச்சர் தொண்டமான் மீது தாக்குதல் தொடுப்பதில் பௌத்த பீடங்கள், அரசியல்வாதிகள், பத்திரிகைகள் என சிங்களப் பேரினவாத சக்திகள் எவையுமே பின்னிற்கவில்லை. எடுத்துக்காட்டாக, இலங்கையில் இன்று தமிழர்களால் உருவாகி வரும் ஆபத்தைப் புறக்கணித்து விடக் கூடாது எனத் தெரிவித்துள்ள சமஸ்தலங்கா அமரபுர தலைமைப் பீடாதிபதி நாகொட பரஞ்சாகீர்த்தி தேரோ, ''மலைநாட்டில் தமிழ் அரசு ஒன்று உருவாகும் என 1983ஆம் ஆண்டிலேயே நான் கூறினேன். கண்டி பௌத்த பீடங்கள் தமிழ் அரசிடம் செல்லும். மேலும் தலதா மாளிகை கூட தமிழ் அரசாங்கத்திடமே செல்லும் ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது' என இனவாதத்தைக் கக்கியுள்ளார்.

அமரபுர பீடாதிபதியின் இக்கூற்றுக்கு ஏற்ப ''மலையகத்தை விட்டு இந்தியத் தமிழரை வெளியேற்றாது விட்டால் வடக்கு - கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள நிலையே மலையகத்தில் நாளை ஏற்படுவது தவிர்க்க முடியாது என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனா குரல் எழுப்பியுள்ளார்.

இதேவேளை, 'ஐலண்ட்' பத்திரிகை தனது பங்கிற்

# வடக்கு - கிழக்கை பிரிப்பின் அரசிற்கு உதவத் தயார்!

**- காமினி ஜயசூரியா**

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக்கு எதிராக அரசாங்கம் செயற்படுமானால் அரசியலில் ஈடுபடவும் அரசாங்கத்துடன் இணைந்து பிரசாரம் செய்ய தான் தயார் என சிங்கள பாதுகாப்பு சபை தலைவரும் சிறிலங்கா மாபோதி சங்கத்தின் தலைவருமான காமினி ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

''இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைக்க ஜே. ஆர். ஜெயவர்த்தன சம்மதித்த போது அமைச்சர் பதவியைத் துறந்து அரசியலை விட்டு ஒதுங்கிய நான் அவ்விணைப்புக்கு எதிராக அரசாங்கம் செயற்படுமானால் அரசாங்கத்துடன் இணையத்தயார்'' என்று அவர் மேலும் கூறினார்.

''இணைப்பை எதிர்ப்பதற்கு நான் கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்ய தனிப்பட்டமுறையிலும் இயக்க ரீதியிலும் தயாராக இருக்கிறேன். இதற்கு பௌத்த விகாரைகளும் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கவேண்டும்.

இணைப்பை ஆதரிப்பவர்களை பௌத்த சிங்கள மக்கள் இனம்கண்டு அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டும். பௌத்த சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இது எமது பௌத்த சிங்கள இனத்தைக் காக்கும் முயற்சி என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. துட்டகைமுனு, விஜயபாகுபோன்ற அரசர்கள் இந்த நாட்டிற்காக செய்த தியாகங்களை நாம் மறந்துவிடக்கூடாது. ஒவ்வொரு வீட்டிலும் துட்டகைமுனுக்களும் விஜயபாகு மன்னர்களும் உருவாக வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## கடற்படை வாகனத்தில் கடத்தல் செய்தோர் கைது

(கொழும்பு)

கடற்படை வாகனத்தில் கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டனர் இந்த நால்வரில் இருவர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என்று றாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எட்டுலட்சம் பெறுமதியான உடுபுடவைகளே கடத்திச் செல்ல முயற்சி செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கடற்படை வாகனத்தில் ஏற்றிவந்த பொருள்களை தனியார் வாகனமொன்றில் ஏற்றிக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்டபோதே இவர்கள் 'றாகம' பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

## விவசாயிகள் ஓய்வூதியம்

யாழ் மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம்பெறும்விவசாயிகளின் 1993 ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை வியாழக்கிழமை கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

---

இந்தியவிற்கு கொண்டு உரையாற்றிய அவர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபாயங்கள் குறித்து குறிப்பிட்டு இந்தியாவின் ஒரு புறத்தில் விடுதலைப் புலிகள் பிரச்சினைகளை உருவாக்கிவருகின்றனர். இன்னொரு பக்கம் வடகிழக்கு மாநிலங்களில் சீர்குலைவு சக்திகள் தங்களது தலைகளைத் தூக்குகின்றன என்றார்.

தீய நோக்கிலான அவற்றின் நடவடிக்கைகள் வெற்றி கொள்ள ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் திரு. ராவ் கூறினார்.

---

புலிகளை

''பேச்சுக்களின் தலைவர் பிரபாகரன் கலந்துகொள்ள வேண்டும் என்பதே சபாநாயக

## வருடாந்த பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் (வ. து) வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சமாசத் தலைவர் திரு ச. முருகநேசன் தலைமையில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். (24)

---

வாக்கு

அநுரா பண்டாரநாயக்கா சம்பந்தப்பட்டவகையில் அவருக்கும் எனக்குமிடையில் நல்லுறவு இருந்து வந்துள்ளது. எனவே இந்தப் பிரவேசம் உதவியாக இருக்குமென்றே நினைக்கிறேன். என்று கூறினார் [illegible]

தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி இரத்தினபுரி கூட்டத்தில் தெரிவித்தார். கிராம மக்களைவிட தோட்ட மக்கள் நல்ல நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அப்படியானால் எட்டுரூபா சம்பள உயர்வு கிடைக்குமா? என்ற கேள்விக்கு-

## தையற் பயிற்சி

(மானிப்பாய்)

இலங்கைசெஞ்சிலுவைச்சங்க சண்டிலிப்பாய் கிளையில் இலவச தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

அண்மையில் ஆரம்பமான இப்புதிய பிரிவில் பயிலவிரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு மேற்படி கிளையினர் கேட்டுள்ளனர்.

**தேசிய இளைஞர் சேவைகள் மன்ற**

## வடபகுதி அலுவலகம் வவுனியாவுக்கு நகரலாம்?

கிளிநொச்சியில் இயங்கிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வட பகுதிகாரியாலயம் வவுனியாவிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதன் வடபகுதிப் பணிப்பாளர் அ. நாகேந்திரன் 26. 10. 93 அன்று ஓய்வு பெற்றதை அடுத்து இந் நடவடிக்கை மேற் கொள்ளப் படுகிறது.

வவுனியாவில் இயங்க வைக்கப்படவுள்ள இதன் அலுவலகத்தில் வட பகுதி காரியாலயங்களைச் சேர்ந்த அனைத்துஊழியர்களும் பணிபுரிவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அநுராவின் இடத்திற்கு அழகக்கோன் நியமனம்

அநுரா பண்டாரநாயக்க தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துகொண்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளார்.

இவரின் இடத்திற்கு மேல் மாகாணசபை உறுப்பினர் யு. என். அழகக்கோன் நியமனம் செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. அழகக்கோனின் இடத்திற்கு முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என்று அறியவருகிறது.

## புடைவை திருட்டு காவல் துறையால் மீட்பு

[பருத்தித்துறை]

பருத்தித்துறை புடைவையகத்தில் இடம்பெற்ற கொள்ளை சம்பந்தமாகப் புலன் விசாரணைகளில் ஈடுபட்ட பருத்தித்துறை தமிழீழக் காவல் துறையினர் கொள்ளையில் ஈடுபட்டவர்களை கைது செய்ததுடன் கொள்ளையடிக்கப்பட்ட புடைவை வகைகளையும் மீட்டுள்ளனர்.

கடந்த மாதம் 4-ம் திகதி பருத்தித்துறை நகரில் உள்ள ஜானகி புடைவையகம் நள்ளிரவு வேளையில் கூரை பிரிக்கப்பட்டு காஞ்சிபுரம் சேலைகள், சாரவகைகள், சேட் வகைகள் உட்பட சுமார் 2,00,000 ரூபா பெறுமதியான புடைவை வகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. இக் கொள்ளை சம்பந்தமாக புடைவைக் கடை உரிமையாளர் பருத்தித்துறை தமிழீழ காவல்துறையில் புகார் செய்திருந்தார். இக் கொள்ளை சம்பந்தமாக புலன் விசாரணைகளில் ஈடுபட்ட காவல் துறையினர் கொள்ளைநபரைக் கைது செய்ததுடன் கொள்ளைப் புடைவை வகைகளையும் மீட்டனர்.

இதனைத் தொடர்ந்து காவல் துறையினர் இக் கொள்ளைநபருக்கு எதிராக பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (25)

# 'ஹஸ்ரத்பால்' தீவிரவாதிகள் பின்னணியில் பாகிஸ்தான்

## இந்திய இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

(டில்லி)

சிறிநகரில் ஹஸ்ரத்பால் புனித ஸ்தலத்தில் புகுந்திருக்கும் தீவிரவாதிகள் செயலின் பின்னணியில் பாகிஸ்தானின் முப்படை உளவு ஸ்தாபனம் சம்பந்தப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் பி. ஸீ. ஜோசி கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லி

கொண்டு வருவதாகவும் மசூதிக்குள் இருந்த போராளிகள் தப்பிச் செல்ல எடுத்த முயற்சியை இராணுவம் முறியடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**ஹஸ்ரத்பால் முற்றுகை**

## தீவிரவாதிகளுடன் நீண்டநேரப்பேச்சு

இந்த வகையில் அமைச்சர் தொண்டமான் மீது தாக்குதல் தொடுப்பதில் பௌத்த பீடங்கள், அரசியல்வாதிகள், பத்திரிகைகள் என சிங்களப் பேரினவாத சக்திகள் எவையுமே பின்நிற்கவில்லை. எடுத்துக்காட்டாக, இலங்கையில் இன்று தமிழர்களால் உருவாகி வரும் ஆபத்தைப் புறக்கணித்து விடக் கூடாது எனத் தெரிவித்துள்ள சமஸ்தலங்கா அமரபுர தலைமைப் பீடாதிபதி நாகொட பரஞ்சாகீர்த்தி தேரோ, ''மலைநாட்டில் தமிழ் அரசு ஒன்று உருவாகும் என 1983ஆம் ஆண்டிலேயே நான் கூறினேன். கண்டி பௌத்த பீடங்கள் தமிழ் அரசிடம் செல்லும். மேலும் தலதா மாளிகை கூட தமிழ் அரசாங்கத்திடமே செல்லும் ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது' என இனவாதத்தைக் கக்கியுள்ளார்.

அமரபுர பீடாதிபதியின் இக்குரலுக்கு ஏற்ப ''மலையகத்தை விட்டு இந்தியத் தமிழரை வெளியேற்றாது விட்டால் வடக்கு - கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள நிலையே மலையகத்தில் நாளை ஏற்படுவது தவிர்க்க முடியாது என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனா குரல் எழுப்பியுள்ளார்.

இதேவேளை, 'ஐலண்ட்' பத்திரிகை தனது பங்கிற்கென ''அநேகமாய் உலகிலேயே மிகவும் சலுகையும், சுதந்திரமும் பெற்ற அரசியல்வாதியாக தொண்டமான் இருக்கின்றார்'' என்றும், ஏழு லட்சம் வாக்குகளை வைத்துக் கொண்டு அரசியல் ஆதாயம் தேட அவர் முனைகிறார் எனவும் ஒரு விமர்சனத்தில் சாடியுள்ளது.

இவ்வாறாக, சிங்களப் பேரினவாத சக்திகள் மலையகத் தமிழர் மீதும், அமைச்சர் தொண்டமான் மீதும் சீறிப் பாய்வதற்குக் காரணம் என்ன? மலையக மக்கள் பெற்றுவிட்ட சலுகையோ உரிமையோ என்ன? அமைச்சர் தொண்டமான் தான் சாதித்து விட்டதென்ன?

இதற்கெல்லாம் காரணம் மலையக மக்கள் அரைகுறையாகப் பெற்றுக் கொண்ட பிரஜா உரிமையும், அதன்மூலம் கிடைக்கவுள்ள வாக்குரிமையுமே ஆகும். அதாவது, நூற்றிஐம்பதிற்கும் மேற்பட்ட வருடங்கள் இரத்தம் சிந்தி உழைத்த மக்கள், சிறிலங்காவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கியவர்கள் பெற்றுக் கொண்ட பிரஜா உரிமையே இதற்குக் காரணமாகும். இதைத் தவிர மலையக மக்கள் இதுவரை எதையும் பெற்றுக்கொள்ளவில்லை அமைச்சர் தொண்டமான் தனது குடும்பத்திற்கென தேடிக் கொண்ட சொத்தைத் தவிர.

அதாவது, 16ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிலும் 17ஆம் நூற்றாண்டில் அவுஸ்திரேலியாவிலும் குடியேறிய ஆங்கிலேயர்கள் ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்குத் தாம் குடியேறிய பகுதிகளுக்குச் சுதந்திரம் வேண்டிப் போராடத் தொடங்கி விட்டனர். அப்பகுதிகளைத் தமது தாயகமாகப் பிரகடனமும் செய்து கொண்டனர். விரைவில் சுதந்திரமும் பெற்று தமது அரசுகளையும் நிறுவியும் கொண்டனர்.

ஆனால், மலையகத்தில் குடியேறிய மக்கள் ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாகியும் தம் குடியிருப்பு நிலங்களையே பெற்றுக்கொள்ளமுடியாதவர்களாக உள்ளனர். இன்னமும்அடிமைபோல் லயங்களிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர். தொண்டமான் அமைச்சராகி பதினைந்து வருடங்களுக்கு மேலாகியும் இவர்களின் நிலையில் பாரிய மாற்றமில்லை. மலையக மக்களுக்கு பிரஜா உரிமை கிடைத்ததும் அமைச்சர் தொண்டமானின் போராட்டங்களினால் அல்ல. 1987இல் ஈழப்போர் உருவாக்கியிருந்த அரசியல் சூழ்நிலையே அதற்குக் காரணமாகும்.

இந்நிலையில், சிங்களப் பேரினவாதம் மலையக மக்கள் குறித்தும், அமைச்சர் தொண்டமான் குறித்தும் போடும் கூச்சலானது, மலையகத்தில் தமிழர் ஓர் அரசியல் சக்தியாக எதிர்காலத்தில் உருவாகி விடுவார்களோ என்ற அச்சத்தினாலேயே ஒழிய அரசியல் சக்தியாக உருவாகி விட்டார்கள் என்பதினால் அல்ல. அவ்வாறு இல்லாமல் மலையக மக்கள் தமது சக்தியை இதுவரையில் இனங்கண்டிருப் பார்களேயானால் இன்றைய மலையகத்தின் நிலையேவேறு மாதிரி இருந்திருக்கும்.

வழங்கப்படவுள்ளது.

## இந்திய விற்கு

கொண்டு உரையாற்றிய அவர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபாயங்கள் குறித்து குறிப்பிட்டு இந்தியாவின் ஒரு புறத்தில் விடுதலைப் புலிகள் பிரச்சினைகளை உருவாக்கிவருகின்றனர். இன்னொரு பக்கம் வடகிழக்கு மாநிலங்களில் சீர்குலைவு சக்திகள் தங்களது தலைகளைத் தூக்குகின்றனஎன்றார்.

தீய நோக்கிலான அவற்றின் நடவடிக்கைகள் வெற்றி கொள்ள ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் திரு. ராவ் கூறினார்.

## புலிகளை

''பேச்சுக்களின் தலைவர் பிரபாகரன் கலந்துகொள்ள வேண்டும் என்பதே சபாநாயகரின் நிபந்தனை என்று புலிகளின் பிரதிநிதிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகளின் அழைப்பிற்காக சபாநாயகர் எதிர்பார்த்திருக்கிறார். அவர் அங்கு அரச பிரதிநிதியாக அன்றி சபாநாயகராகவே பேச்சுக்களில் ஈடுபடுவார்'' என்றும்அவ் அதிகாரி தெரிவித்தார்.

## ஆசிரியர்

எடுக்கப்பட்டுவருகின்றன. ஆனால் ஆசிரியர்கள், மாணவர்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதில்அக்கறைசெலுத்துவதாகஇல்லை இதுபற்றி அவர்கள் கவனம் செலுத்தவேண்டும்'' என்றார்.

## சந்திப்பு

(கோண்டாவில்) நடைபெறவுள்ளது. எனவே அதில் மேற்கூறிய துறையினர்அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

## வரவுசெலவு

இதேவேளை இப்பகிஷ்கரிப்பைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிப்பிரதிநிதி ''இன்று நண்பகல் நடைபெறவுள்ள கட்சிப்பாராளுமன்றஉறுப்பினர்கள்கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்'' என்றார்.

இப்பகிஷ்கரிப்புநடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட ஈ.பி. ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ''வடக்கு கிழக்கு பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை எனக்கூறி தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி முற்படுகிறார். இந் நிலையில் இராணுவ நடவடிக்கைக்கு ஏற்ப இவ் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இதனை பகிஷ்கரிக்க உள்ளோம்'' என்றார்.

நேசன் தலைமையில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். (24)

## வாக்கு

அநுரா பண்டாரநாயக்கா சம்பந்தப்பட்டவகையில் அவருக்கும் எனக்குமிடையில் நல்லுறவு இருந்து வந்துள்ளது. எனவே இந்தப் பிரவேசம் உதவியாக இருக்குமென்றே நினைக்கிறேன். என்று பதிலளித்தார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி இரத்தினபுரி கூட்டத்தில் தெரிவித்தார். கிராம மக்களைவிட தோட்ட மக்கள் நல்ல நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அப்படியானால் எட்டுரூபா சம்பள உயர்வு கிடைக்குமா? என்ற கேள்விக்கு-

சம்பள உயர்வை வழங்க வைக்கவேண்டும் அதற்கு அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும் என்று பதிலளித்தார்.

தோட்டத்துறை விடயத்தில் அரசாங்கம் பிரச்சினையிலிருந்து ஒதுங்கிக் கொண்டால் போதும் என்று நினைப்பதுபோல் தெரிகின்றது. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இதனை ஒரு வாழ்க்கைப் பிரச்சினையாக கருதவேண்டியுள்ளது. இதில் இ.தொ.காவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு-

இவ்வாறானதொருபோக்கை நாம் கைவிடப்போவதில்லை. காங்கிரஸுக்கு இருக்கும் செல்வாக்கை உபயோகித்து அரசு பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்பதையும், தொழிலாளர்கள் இதுவரை அனுபவித்துவந்த உரிமைகள், சலுகைகளுக்கு பங்கம் ஏற்படாதவாறு பாதுகாக்கப்படவேண்டும் என்பது குறித்தும் அரசாங்கத்திடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வற்புறுத்தும் என்று அவர் பதிலளித்தார்.

என்னைப் பொறுத்தவரை இலங்கை வாழ். இந்திய வம்சாவளி மக்கள் அனைத்து உதவிகளையும் பெற்றுவிட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. சட்டரீதியாக சில உரிமைகளை பெற்றுள்ளோம். அவ்வாறு பெற்ற உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் தான், நாம் குறியாக இருக்கிறோம். ஆனால் இதனை தடுத்துவிட அரசுக்குள்ளும், வெளியிலும் சில துவேஷசக்திகள் முனைப்பாக இருந்து செயற்படுகின்றன. ஹெல உறுமய, கண்டிய விவசாயிகள் பிரதேச உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் என்பன போன்ற சில இயக்கங்கள் எமக்கெதிரான பிரசாரங்களை முன்னெடுத்து செயற்படுகின்றன என்று தொண்டமான் வேறு கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போது தெரிவித்தார்.

வினர் கேட்டுள்ளனர்.

2,00,000 ரூபா பெறுமதி

மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (25)

# 'ஹஸ்ரத்பால்' தீவிரவாதிகள் பின்னணியில் பாகிஸ்தான்

## இந்திய இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

(டில்லி)

சிறிநகரில் ஹஸ்ரத்பால் புனித ஸ்தலத்தில் புகுந்திருக்கும் தீவிரவாதிகள் செயலின் பின்னணியில் பாகிஸ்தானின் முப்படை உளவு ஸ்தாபனம் சம்பந்தப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் பி. ஸீ. ஜோசி கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் ஹஸ்ரத்பால் சிக்கலைக் கையாள்வதில் சிவில் நிர்வாகத்தினருக்கும் இராணுவத்தினருக்குமிடையில் சிறப்பான ஒருங்கிணைப்பு காணப்படுவதாகவும் கூறினார்.

இதேவேளை கடந்த மூன்று வாரங்களாக காஷ்மீரில் இராணுவத்தின் முற்றுகையிலுள்ள ''ஹஸ்ரத்பால்'' மசூதியை நோக்கித் தாக்குதல் எதையும் நடத்தாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க மசூதிக்குள் இருப்பவர்களுடன் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வு காண அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் மசூதிக்குள் இருந்த போராளிகள் தப்பிச் செல்ல எடுத்த முயற்சியை இராணுவம் முறியடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சதுரங்க போட்டி

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழா தொடர்பாக நடைபெறும் போட்டிகளில் ஆசிரியர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டி இன்று புதன் காலை 8.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் பட்மின்ரன் இறுதி நிலைப்போட்டி நாளை வியாழன் பி. ப. 12-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

## இலவச மூக்குக்கண்ணாடி

வசதியற்ற கண்பார்வை குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கயாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கின்றது. ஆகையினால் அதிபர்கள் தங்கள் பாடசாலையில் கண்பார்வை குறைந்த மாணவர்களிடமிருந்து கண்பரிசோதனை அறிக்கைளைச் சேகரித்து வரும் 25ஆம் திகதிக்கு முன் யாழ். கல்வித் திணைக்களத்திற்குத் தங்களின் சிபாசுடன் அனுப்பி வைக்கும்படி யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

ஹஸ்ரத்பால் முற்றுகை

## தீவிரவாதிகளுடன் நீண்டநேரப்பேச்சு

(டில்லி)

சிறிநகரில் ஹஸ்ரத்பால் புனித ஸ்தலத்திற்குள் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளுடன் அரசு தரப்பில் பேச்சு நடத்தி வரும் தலைமைப் பிரதிநிதி திரு. நகிமத்துர் ரகுமான் நேற்று முன்தினம் இரு தீவிரவாதிகளுடன் நீண்டநேரம் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு மூன்று இளைஞர்கள் சிகரட்டுகளுக்காக காவல் புரிந்து கொண்டிருந்த பந்தோபஸ்துப் படையினரை அணுகியதாகவும் இது வெளியே வருவதற்கான ஒரு முயற்சிபோலத் தெரிவதாகவும் இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஹன்வர் கூறியுள்ளார்.

இதனிடையே ஹஸ்ரத்பாலின் புனிதத்துவத்தைப் பராமரிக்கும்வகையில்அதனை விட்டு வெளியேறுமாறு தீவிரவாதிகளை வற்புறுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 26 நாட்களாக நிலவிவரும் இந்தச் சிக்கலுக்கு சட்டத்திற்கு உட்பட்ட வகையில் நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதையே அரசு விரும்புவதாக மாநிலபொலிஸ் ஜெனரல் மகிந்த சப்ரல்ரால் தெரிவித்துள்ளார்.

அடைமழை காரணமாக

## வன்னிப் பகுதியில் குளங்கள் உடைப்பு

(வவுனியா)

அடைமழைகாரணமாகவன்னிப் பகுதியில் பல குளங்கள் உடைப்பெடுத்துப் பாய்வதாக தெரிவிக்கப்படுகிறது

துணுக்காய்பகுதியில் உள்ள முருங்கன் குளம் உடைப்பெடுத்துப் பாய்வதால் வீதிப் போக்குவரத்து சீர்குலைந்திருப்பதாக அறியவருகிறது.

இதே வேளை, மன்னார் பூநகரி வீதியில் உள்ள பாலி ஆறு மூடிப்பாய்வதால் வெள்ளம் வீதியில் ஒன்றரை அடி உயர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மடு அகதிமுகாமில்

## யூ.என்.எச்.சி.ஆர். செயற்பாடு தற்காலிக இடைநிறுத்தம்

(கொழும்பு)

மடு அகதிமுகாமில் பணியாற்றிய அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்.) தனது பணியை தற்காலிகமாகஇடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. 30 ஆயிரம் பேர் உள்ள இம் முகாமில் ஆறாயிரம்பேர்கொண்ட ஒரு தொகுதியினருக்கு உணவு நிவாரணத்தை நிறுத்தப்போவதாக சிறிலங்கா அரசு எடுத்த முடிவை ஆட்சேபித்து அண்மையில் இந்த அகதிகள் மடுவிலுள்ள யூ. என். எச். சி. ஆர் அலுவலகம் முன்பாக மறியல் செய்தனர் என்பது தெரிந்ததே.

தாம் அங்கு திரும்ப விடுதலைப்புலிகள் பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தாலே தமது பணியை அங்கு ஆரம்பிப்போம் என யூ. என். எச் சி. ஆர். அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மங்களகரமான திறப்புவிழா

சேரன் பல்பொருள் வாணிபத்தின்
தென்மராட்சி சேவை.........

சாவகச்சேரியில்
இன்று (10. 11. 93) காலை 9. 00 மணியளவில் ஆரம்பிக்கப்படுகின்றது.

## சேரன் பல்பொருள் வாணிபம்

வர்த்தகர்களினதும் மக்களினதும் தேவையைப் பூர்த்தி செய்வதே சேரனின் நோக்கம்
"உங்களின் தேவை எதுவோ அதுவே சேரனின் சேவை"

**சேரன் பல்பொருள் வாணிபம்**
கண்டிவீதி, சாவகச்சேரி.


(சி-7885)



**விவசாயிகளே!**
**தொழிற்சாலை உரிமையாளர்களே!**
**இயந்திரப்பாவனையாளர்களே!**

## எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்

பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான
குறைந்த செலவில் மாற்றிடாக வருகின்றது



**உங்கள்**

- நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
- மின் பிறப்பாக்கியை இயக்க


## சுகாதார கருத்தரங்கு

[தென்மராட்சி]

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல உணவு பரிமாறும் நிலைய உரிமையாளர்களுக்கும், பணியாளர்களுக்குமான 'சுகாதாரகருத்தரங்கு' இன்று காலை 9.30 மணிக்கு பளை பிரதேசசபை மண்டபத்தில் நடாத்துவதற்கு பிரதேச சபை செயலாளரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [86]

## சாரணர் விழா

(தொல்புரம்)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம் நடாத்தும் வருடாந்த சாரணர் பாசறைவிழாவும், குருளைச் சாரணர் ஆண்டு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2. 00மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் தலைமையில் நடைபெறும். (41)

# கருணாநிதி - கோபாலசாமி சமரசத்திற்கு வாய்ப்பில்லை

## இரு தரப்பினரும் அறிவிப்பு

(சென்னை)

தி. மு. க தலைவர் கருணாநிதியும் வை. கோபாலசாமியும் இனி தம்மிடையே சமரச உடன்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என அறிவித்துவிட்டனர்.

நேற்றுமுன்தினம் கோவையில் பேசிய கருணாநிதி கட்சி தலைமைக்கும் கிளர்ச்சியாளர் கோபாலசாமிக்கும் இடையே உள்ள பிரச்சினையை சுமுகமாக தீர்க்கும் வாய்ப்பு நாளுக்கு நாள் எட்டச்செல்கிறது எனவும், சமரசம் செய்யும் வாய்ப்பும் இல்லை என்றும் கூறினார். கட்சியின் பொதுச்செயலர் அன்பழகனை சந்தித்து பேசியபின் வை. கோபாலசாமிமீது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

இதேவேளை நேற்று இது குறித்து செய்தியாளரிடம் கருத்துக்கூறிய வை. கோபால்சாமி தன்னை கட்சியிலிருந்து விலக்கினால் தாம் வினோதமான ஓர்போராட்டம் தொடங்குவேன் என்றார். கட்சித் தலைமையுடன் தாம் சுமூக தீர்வு காணும் வாய்ப்பில்லை எனவும், கொலைகாரன், துரோகி, காட்டிக்கொடுப்பவன் என்று கருணாநிதி பேசியபின் சமரசத் தீர்வுக்கு வழியில்லை எனவும் அவர் கூறினார். தனது தி. மு. க. ஆதரவாளர் மீது தி. மு. க. குண்டர்கள் தாக்குவதாகவும் தன்னை கருணாநிதி அரசியல் ரீதியில் அழிக்க முயற்சிக்கின்றார் எனவும் கோபாலசாமி குற்றம்சாட்டினார்.

ராஜீவ் கொலை வழக்கு

## கருணாநிதி, வி. பி. சிங் விசாரணைக்கு வர பணிப்பு

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரணை நடத்திவரும் ஜெயின்கமிஷன் சில அரசியல் பிரமுகர்களை விசாரணைக்கு வருமாறுகோரி அழைப்பாணை விடுத்துள்ளது.

முன்னாள் பிரதமர் வி. பி. சிங், முன்னாள் தமிழக முதலமைச்சர் மு கருணாநிதி மற்றும் வேறு ஐவருக்கு இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏழு பேரும் இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன்பாக விசாரணைக் குழுவிடம் ஆஜராக வேண்டும் என ஜெயின்கமிஷன் தனது அழைப்பாணையில்குறிப்பிட்டுள்ளது.

## 'பசுமை' திறப்பு

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அனைத்து விவசாயிகளினதும் நன்மை கருதி "பசுமை" எனும் விவசாய சேவை நிலையம்ஒன்று இன்று கோண்டாவில் சந்திக்கு அண்மையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த விவசாயசேவை நிலையத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரம், கிருமிநாசினி, விதை தானியங்கள், பழமரக்கன்றுகள் என்பவற்றைபெற்றுக்கொள்ளலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பொருட்காட்சி

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி கல்விப் பொருட்காட்சி இன்றும், நாளையும் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 4 00 மணிவரை அக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## 1-வது பிறந்தநாள்வாழ்த்து

10-11-1993



**செல்வன் விதூரபன்**

இணுவில் கிழக்கு மஞ்சத்தடியைச் சேர்ந்த தவபாலன் -சத்தியபாமா தம்பதிகளின் செல்வப் புதல்வன் விதூரபன் தனது முதலாவது பிறந்த தினத்தை சுவிஸில் அப்பா, அம்மா, பெரிய சித்தப்பா, சித்தி, தம்பி புவனராஜ்யுடன் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை இணுவிலில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை, ஆசைச் சித்தப்பா, இளைய சித்தப்பா, பூட்டன், பூட்டி, அம்மம்மா, அம்மப்பா, பெரியம்மா, மாமாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இணுவில் சிவகாமி அம்மையின் அருளால் கலைகளும் பெற்று பல்

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

**08-11-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11552

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-0878, 24 9490, 42.0999, 28.7261, 24-415, 42-2355, 24-5418, 24-3258, 24-336, 27-2212, 42-2317, 42 1182, 26 2125, 24-5774, 24-5241, 26-6933, 26-8674, 41 7109, 40-7583.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:


27-7822, 26-7540, 26-2829, 27-5197, 41-2979, 26-0547, 26-8810, 26 8917, 24-9773, 27-3927.

**09-11-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11571

வற்றைபெற்றுக்கொள்ளலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிற்பகல் 4 00 மணிவரை அக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.




**உங்கள்**

- ஃ நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
- ஃ மின் பிறப்பாக்கியை இயக்க

**மரக்கரி அல்லது
சிரட்டைக்கரி மட்டுமே
கொண்டு சக்தியைத்
தரவல்லதுதான்**

ஆக்கிவாயு பிறப்பாக்கி

(தமிழீழத்தில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது)

## இரகசியம் ஒன்றுமில்லை.

ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தி தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லது. இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணை, டீசல் இயந்திரங்களை இயக்கவல்ல ஆக்கிவாயுவை உற்பத்தி செய்கின்றன.

உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆககிவாயுப் பிறப்பாக்கிகளை இணைத்து இயக்க முடியும், முதற்கட்டமாக வூல்சிலி(Wolseley) இயந்திரங்களுக்குப் பொருத்திக்கொள்ளலாம் பொருத்தவேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்

**எல்லாநாட்களிலும் காலை 10 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.**

**எமது அலுவலகம்**

சக்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
காங்கேசன்துறை வீதி. தாவடிச் சந்தி தாவடி

(சி-7859)



## செல்வன் விதூரபன்

இணுவில் கிழக்கு மஞ்சத்தடியைச் சேர்ந்த தவபாலன் -சத்தியபாமா தம்பதிகளின் செல்வப் புதல்வன் விதூரபன் தனது முதலாவது பிறந்த தினத்தை சுவிஸில் அப்பா, அம்மா, பெரிய சித்தப்பா, சித்தி, தம்பி புவனராஜ்யுடன் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை இணுவிலில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை, ஆசைச் சித்தப்பா, இளைய சித்தப்பா, பூட்டன், பூட்டி, அம்மம்மா, அம்மப்பா, பெரியம்மா, மாமாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இணுவில் சிவகாமி அம்மையின் அருளால் கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

இணுவில் கிழக்கு, அ. தங்கராசா
மஞ்சத்தடி. (6539)

## தேவை

**யாழ் நகரில் பிரபல்யமுள்ள புகைப்பட நிலையத்தில் பணிபுரிய, புகைப்படத் துறையில் சகல அனுபவமுள்ள ஒருவர் உடன் தேவை.**

விண்ணப்ப முடிவு: 15. 11. 93

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இலக்கம் 14, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

(சி-7872)

## கர்த்தருக்குள் நித்திரையடைந்து 6-ம் ஆண்டு நினைவு தினம்

| தாயின் மடியில் | | இயேசுவின் கையில் |
|---|---|---|
| 1957 | | 1987 |
| — | | — |
| 01 |  | 11 |
| — | | — |
| 02 | | 10 |

**திருமதி செபஸ்தியாம்பிள்ளை
லில்லியம்மா** (நேசமலர்)
சேந்தாங்குளம் இளவாலை

இயேசு,
நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன்.
யோவான் 11;25

(6508) கணவன், பிள்ளைகள்.

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 08-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11552

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-0878, 24 9490, 42 0999, 28.7261, 24-415, 42-2355, 24-5418, 24-3258, 24-336, 27-2212, 42-2317, 42 1182, 26 2125, 24-5774, 24-5241, 26-6933, 26 8674, 41 7109, 40 7583.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-7822, 26-7540, 26-2829, 27-5197, 41-2979, 26-0547, 26-8810, 26 8917, 24-9773, 27-3927.

### 09-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11571

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்: இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28 6996, 24 8484, 26 0786, 26-4691, 43-3854, 28-4545, 26 5774, 22-3611, 28-7662, 27-9722, 40 4760, 26 6984, 26,2668, 24 4325, 27-5449, 26-1791, 41-1531, 27 9466, 27-2084, Care-26.

## இதோ இனிமையின் தனித்துவம்!

- ❋ பாஸ்மா வகைகள்
- ❋ இனிப்பு, பிஸ்கட் வகைகள்
- ❋ சொக்கலேட்ஷ் வகைகள்

இவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஒரே ஸ்தாபனம்

**சில்வர் வர்த்தக நிலையம்**
3, B, (11) ஸ்ரான்லி வீதி – யாழ்ப்பாணம்.

(சி-7885)

**யாழ் நகர் ஸ்ரீ திரையரங்கில்**

## The Super Cops

[கராட்டி]

**தினசரி பிற்பகல் 4-00 மணி, மாலை 6-00 மணி
சனி, ஞாயிறு காலை 10-30, பிற்பகல் 2-30, 4-00, மாலை 6.00 மணி**

கராட்டி திரைப்பட வரிசையில் மற்றுமோர் திரைவிருந்து

(சி-7852)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.